**செய்தி வெளியீடு எண்: 82/2023** **நாள்: 13.07.2023**

**பத்திரிக்கைச் செய்தி**

**<u>அறிஞர் அண்ணா ஆலந்தூர் மெட்ரோ இரயில் நிலையத்தில்</u>**

**<u>2 மற்றும் 4 சக்கர வாகன நிறுத்தும் இடம் திறப்பு</u>**

**<u>சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர் ராஜேஷ் சதுர்வேதி தகவல்</u>**

அறிஞர் அண்ணா ஆலந்தூர் மெட்ரோ இரயில் நிலையத்தில் பயணிகளின் கோரிக்கை ஏற்று, இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடம் திறந்து வைக்கப்பட்டுள்ளதாகவும் வாகன நிறுத்துமிடம் மேலும் தேவைப்படும் மெட்ரோ இரயில் நிலையங்களில் திறக்க தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர் ராஜேஷ் சதுர்வேதி (அமைப்புகள் மற்றும் இயக்கம்) தெரிவித்துள்ளார்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவன திட்ட இயக்குநர் தி.அர்ச்சுனன் முன்னிலையில், அறிஞர் அண்ணா ஆலந்தூர் மெட்ரோ இரயில் நிலையத்தில் புதுப்பிக்கப்பட்ட வாகன நிறுத்தும் இடத்தை திறந்து வைத்த சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர் ராஜேஷ் சதுர்வேதி தெரிவித்துள்ளதாவது:-

அறிஞர் அண்ணா ஆலந்தூர் மெட்ரோ இரயில் நிலையத்தில் உள்ள நான்கு சக்கர வாகன நிறுத்தும் இடம் மார்ச் 24, 2023 முதல் மூன்று மாதங்களுக்கு சீரமைப்பு பணிகளுக்காக தற்காலிகமாக மூடப்பட்டது. இதற்கான பணிகள் முடிவடைந்த நிலையில் இன்று (13.07.2023) முதல் வாகனம் நிறுத்தம் வசதிக்காக திறக்கப்பட்டுள்ளது.

இந்த புதுப்பிக்கப்பட்ட வாகன நிறுத்தும் இடத்தில் 1500 இரு சக்கர வாகனங்கள் மற்றும் 180 நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்த முடியும். மெட்ரோ இரயில் பயணிகள் இன்று (13.07.2023) முதல் இந்த வாகன நிறுத்தும் இடத்தை பயன்படுத்திக்கொள்ளலாம். பயணிகளின் வசதிகாக அறிஞர் அண்ணா ஆலந்தூர் மெட்ரோ இரயில் நிலையத்தில் கூடுதலாக இருசக்கர வாகனங்கள் நிறுத்துவதற்கான வசதி செய்யப்பட்டு வெகுவிரைவில் திறக்கப்படவுள்ளது.

இந்நிகழ்ச்சியில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் கூடுதல் பொது மேலாளர் எஸ். சதீஷ்பிரபு (தொடர்வண்டி மற்றும் இயக்கம்), மேலாளர்கள் பி. லட்சுமி (வருவாய்), அல்தாஃப் ஹுசைன் (செயல்பாடுகள்) மற்றும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் பணியாளர்கள் உடன் இருந்தனர்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**

@cmrlofficial Chennai Metro Rail @chennaimetrorail

@ChennaiMetroRail www.chennaimetrorail.org